IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 344 of 2021

Deposition of witness for

PW 10(LW13)

Name : Thiru. Prasanth

Father's Name :Thangaraj

Age :

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of August 2025 .

26.08.2025

PW1 முதல் விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரிகள் ஆஜர்

நான் கதவிலக்கம் எண்.490, 16 வது குறுக்கு தெரு, டி.பி.சத்திரம், செனாய் நகர், சென்னை - 30 என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் VP Systems சென்ற நிறுவனத்தை சொந்தமாக நடத்தி வருகின்றேன். Diploma in Computer Engineering படித்து இருக்கின்றேன். மேலே குறிப்பிட்ட நிறுவனத்தை 2012 ஆம் வருடத்தில் இருந்து நடத்தி வருகின்றேன்.கடந்த 09.04.2021 அன்று கொத்தவாள் சாவடி ஆய்வாளர் அவர்கள் மாலை 07.30 –ல் இருந்து 08.30– க்குள் என்னை தொடர்பு கொண்டு இருக்கும் பதிவிறக்கம் ஒன்றை பார்வையிட வேண்டும் என்றும், என்னால் வர முடியுமா என்று கேட்டார்கள். நானும் மறுநாள் காலை வருவதாக சொன்னேன். மறுநாள் காலை சுமார் 11.00 மணி அளவில் ஆய்வாளருடன் அண்ணா பிள்ளை தெருவுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு அரிசி கடையில் சிசிடிவி கேமரா ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.மேற்படி கேமராவின் பதிவுகளை பென் டிரைவில் பதிவிறக்கம் செய்து அதை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன், மேற்படி பதிவிறக்கம் செய்தது

சம்பந்தமாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 B –ன் படி ஒரு சான்றிதழையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். மேற்படி சான்றிதழ் சான்றாவணம்.5 ஆகும். எதிரியின் வழக்கறிஞர் சான்றிதழை குறியீடு செய்வதை வன்மையாக ஆட்சேபனை செய்கின்றார். காரணம் சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி அல்லது சிசிடிவி கேமரா சாட்சிக்கு சொந்தமானது இல்லை என்றும், அவர் அந்த சிசிடிவியை தொடர்ந்து பயன்படுத்தவில்லை என்றும், அவரால் இந்த சான்றிதழ் வழங்க முடியாது என்றும் கூறுகின்றார். ஆட்சேபனை குறித்து தீர்ப்பு பகரப்படும் பொழுது எடுக்கப்படும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

என்னுடைய VP சிஸ்டம் என்கின்ற நிறுவனத்தை நான் வீட்டிலேயே வைத்து நடத்தி வருகின்றேன். விபத்து சம்பந்தமான அனைத்து பதிவிறக்கங்களையும் நான்தான் போக்குவரத்து புலனாய்வு போலீசருக்கு எடுத்துக் கொடுப்பேன் அதன் அடிப்படையில் ஆய்வாளர் என்னை தொடர்பு கொண்டு இந்த பதிவிறக்கத்தையும் பதிவிறக்கம் செய்து கொடுக்க கேட்டுக் கொண்டார். மேற்படி விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிரிவு 65 B சான்றிதழ் வழங்க எனக்கு எந்த அருகதையும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. சான்றாவணம் 5–ஐ எந்த தேதியில் கொடுத்தேன் என்று தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சான்றாவணம் 5–ஐ எந்த Hard Disk –ல் இருந்து எடுத்தேன், அதனுடைய சீரியல் நம்பர் என்ன என்பது சம்பந்தப்பட்ட விவரங்கள் எதுவும் சான்றாவணம் 5–ல் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி பதிவிறக்கத்தை பதிவு செய்து கொடுக்க மட்டுமே கடமைப்பட்டிருக்கின்றேன் சாட்சியை திறந்து பார்ப்பதற்கு எனக்கு எந்த விதமான அனுமதி இல்லை, அது தடய அறிவியல் துறை மூலமாக மட்டுமே செய்யப்பட வேண்டும் என்று சாட்சி கூறுகின்றார். சிசிடிவி பதிவிறக்கம் செய்யப்பட்ட போது அளிக்கப்பட்ட சான்றிதழில் மேற்படி சிசிடிவி என்னுடைய அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிட்டு இருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பதிவிறக்கத்தை செய்யும் வரை அது என்னுடைய அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் தான் இருந்தது .ஆனால் Hard Disk –ன் சீரியல் நம்பர் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். போலீஸ் விசாரணையில் 09.04.2021 என்று பதிவிறக்கம் செய்யப்பட்ட சிசிடிவி பதிவுகளை 10.04.2021 அன்று ஆய்வாளிடம்

ஒப்படைத்ததாக குறிப்பிட்டு இருக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. 09.04.2021 என்னை பதிவிறக்கம் செய்து கொடுக்க அழைத்தார்கள். நான் 10.04.2021 அன்று தான் செய்து சிசிடிவி கேமராவின் பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். நான் எந்த தேதிக்கான சம்பவத்தை சிசிடிவி கேமராவில் இருந்து பதிவிறக்கம் செய்து கொடுத்தேன் என்று தற்சமயம் ஞாபகம் இல்லை. சான்றாவணம் 5–ல் குறிப்பிடப்பட்டுள்ள மொபைல் , DVD, Pendrive, CD எனக்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் Default ஆக குறிப்பிடப்பட்டிருப்பதால் எனக்கு தேவையில்லாத விவரங்களை அடித்து விட்டு கொடுக்க முடியாது என்பதால் அதை அவ்வாறே கொடுத்தேன். அதே சான்றாவணம் 5–ல் கைபேசி மட்டுமே இயங்கும் நிலையில் இருப்பதாக குறிப்பிட்டிருப்பதாக என்று சொன்னால், அதுவும் Default ஆக வருவதாக சாட்சி கூறுகிறார். சான்றாவணம் 5–ல் தேதி குறிப்பிடுவதற்காக விடப்பட்ட இடத்தில் DVR என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். என்னால் கொடுக்கப்பட்ட சான்றாவணம் 65 B அதற்கு உரிய விதிமுறைகளின் படி கொடுக்கப்படாததால் மேற்படி சான்றாவணம் செல்ல தக்கது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. சிசிடிவி பதிவுகளை பதிவிறக்கம் செய்த உடனேயே போலீசாரிடம் ஒப்படைக்காமல் அதில் சில மாற்றம் செய்து அதற்கு பின்னரே போலீசாரிடம் ஒப்படைத்தேன் என்று சொன்னால் அது சரியில்லை அதன் காரணத்தினால் தான் என்னால் வழங்கப்பட்ட சான்றிதழ் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்பதற்கான தேதியை குறிப்பிட்டு போடாமலேயே விட்டிருக்கின்றேன் என்று சொன்னால் அதுவும் சரி அல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

26.08.2025

III Addl. Sessions Judge.
III Addl. Court.